**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4253/ஆ5/2023, நாள்.11.10.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – இலக்கிய மன்ற செயல்பாடுகள் – முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா – அனைத்து வகை பள்ளிகளிலும் – சட்டமன்ற நாயகர் – கலைஞர் அவர்களின் சட்ட மன்ற சாதனைகள் குறித்த போட்டிகள் நடத்துதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.45454/எம்/இ2/2023, நாள். 10.10.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தில், முத்தமிழ் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அக்டோபர் – 2023 மாத பள்ளி இலக்கிய மன்ற செயல்பாடுகளின் ஒரு பகுதியாக சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற சாதனைகள் குறித்த சொற்பொழிவு போட்டியினை நடத்திட அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வையில் கண்டுள்ள கடிதத்துடன் இணைத்து பெறப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மலர், தமிழ்நாடு சட்டமன்றப் பவளவிழா, சட்டமன்ற பேரவை வைர விழா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது சட்டமன்ற சாதனைகள் உள்ளிட்ட நூல்களின் மென் நகல்கள் (Soft Copy) இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. இந்நூல்களில் இடம்பெற்றுள்ள விவரங்கள் அடிப்படையில் மாணவர்கள் உரை நிகழ்த்திட தயார் செய்யுமாறு அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற சாதனைகள் குறித்து கருத்தரங்குகள் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – மேற்கண்டுள்ள நூல்களின் மென் நகல்கள் மற்றும்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)